# 9. ஆனந்தநடனசிவம்.

**ப**ரிதியெனு மோர்சடப் பொருளிந்த வுலகெலாம்
பரவுவெயி லாய்விழியினாற்
பார்க்கவுள வெப்பொருள்க ளுக்குமதி விம்மிதப்
பண்டமா யுவமமிலதாய்ப்
பருவமோ ராறுக்கு முதலியா யுளதிதைப்
பண்ணிய நிமித்தமூல
பரனா யனாதியா யசடமா யறிவெனப்
பகரகண் டாகாசமாய்
இருளொளி யெனாவோ ரெதார்த்தவொளி மயமா
யிராநின்ற வுன்னைமனவாக்
கென்பவைக ளைக்கொண் டளப்பதெவ் வாறந்த
விருவகையு மாகநிகழும்
அருமுறைக ளறைகின்ற வுவமங்க ளும்போலி
யாமன்றி யணுவுமொவுமோ
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. 1

---

1. **பருவமோராறு** = கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனி லென்பன. இவற்றுள் ஆவணி புரட்டாதி கார்; ஐப்பசி கார்த்திகை கூதிர்; மார்கழி தை முன்பனி; மாசி பங்குனி பின்பனி; சித்திரை வைகாசி இளவேனில்; ஆனி ஆடி முதுவேனி லென்னும் விவரமறிக. **கார்** = மழைபெய்த லுடைத்து. **கூதிர்** = குளிர்காற்றுடைத்து. **முன்பனி** = முன்னிராவிற் பனியுடைத்து. **பின்பனி** = பின்னிராவிற் பனியுடைத்து. **இளவேனில்** = இளவெயி லுடைத்து. **முதுவேனில்** = முதிர்வெயி லுடைத்து.

**ஏ**டாதவுட லில்லை நடாதநடை யில்லையுள்
ளெண்ணாத வெண்ணமில்லை
இழையாத தொழிலில்லை யேற்காத வேச்சில்லை
யீனாத தாயுமில்லை
படாதபா யில்லை யுடாதவோ ருடையில்லை
பாராத தேயமில்லை
பருகாத வுண்டியிலை யணியாத கலனில்லை
படியாத பாடையில்லை
தொடாதபகை யில்லை யடாதவுற வில்லை
தொடராத துன்புமில்லை
தூயருட் கடவுளே யினியேனு முன்னருட்
சுகநிலையில் வைத்தாளெனா
அடாவெனது நெஞ்சமும் பரிவொடு மடங்கியழ
லானதே கொள்ளொணாதோ
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. 2

**இ**ருவினைத் தொடர்புமோ ரறுவகைக் குற்றமு
மிணக்கமி லைந்துபொறியும்
எழுகின்ற நான்குவகை வாக்கும்வலி குன்றாம
லெழுமும் மலச்செருக்கும்
ஒருசிறிது மில்லாத காலையன் றோமுதுக்
குறைவாகு முற்றுணர்வுதான்
ஒளிவீசு மக்கால முன்னையறி வேனங்க
ணுபயவா தமுமிறந்த
பெருவெளி மகானந்த மயமா யிருக்குமொரு
பேருற்று வாழ்வலெங்கள்
பெருமவுன் றிருவுள்ள மெக்கா லிரங்குமோ
பிழையுளே னறிகிலேனே
அருண்மௌன ஞானஞா னாதீத ககனமே
யமலவின் பப்பரப்பே
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. 3

**ஓ**திநூல் சாமிமொழி சாதனை யெனச்சொல்ல
வுள்ளவொரு மூன்றின்கணும்
உண்மையாய் நின்றாதி யந்தநடு கீழ்மே
லுலப்போ டுதிப்புவிகிர்தஞ்
சாதியெழி லூழுருவ மருவநா மஞ்சலன
சங்காத மாற்றமேதுஞ்
சாராத தாய்வசன மானசந் தாண்டியொரு
சமமின்றி யறிவாகிய
சோதியா யானந்த மயமாக மலருமுன்
சுத்தவீ டடைதலென்போல்
தூயமதி யூற்றமில் லாரெந்த வாறடைவர்
தொண்டர்கம் பலைசீக்குமெம்
ஆதர நிரந்தர முனக்கடிமை யல்லாம
லார்க்கடிமை யாங்களருளே
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. 4

**ப**ச்சிலைக் கீடநடை போலோ ருடம்பினைப்
பற்றியிழி யாக்கைநீக்கும்
பண்பியிவ் வான்மா வெனப்பண்டை யோர்சொற்ற
பழமொழிக் குரியவர்த்தம்
இச்சையுடை யான்மவர்க் கத்துளிரு வினைநிலத்
தெய்தவுள பூதசாரம்
ஏற்காத சிலவந்த வாறுவினை யளவா
யெடுத்திடு முடம்பென்னவே

4. **ஓதிநூல்** = ஞானசாத்திரம்; **ஓதி** = ஞானம்; **சூ – நிகண்டு.**

**சாமிமொழி** = குரூபதேசம். குருவைப்பற்றிப் பிரமாணங்களோ டறியவேண்டிய மேம்பாடு முதலியன, **பரிபூரணானந்தபோதத்துக்** "காமிய மிலாதுகுரு" என்றற்றொடக்கத்துச் செய்யுளுரையி லுள்ளன.

**சீத்தல்** = தூய்தாக்கல்; **சூ – நிகண்டு. ஆதரம்** = ஆசை; **சூ – நிகண்டு.**

5. பூதசாரவிவரம் 'தன்னையாள் சுவாமி' என்னும் 21 – ஆம் பத்திலுண்டு. மஞ்சு எனற்பாலது மச்சு என எதுகைநோக்கி வலித்தவாறு. **மஞ்சு** = அழகு.

மச்சுறக் கொள்ளாது செத்தவுட னொருகாய
மருவுமத னான்மத்தியில்
வருமென்னு நரககற் பங்களில நமனென்ற
மறலியு மவத்தமென்றோ
ரச்சமில் லாதறையு மவிவேக ரதிநுட்ப
வறிவுநெறி யுந்தேர்வரோ
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. 5

**த**வமகிமை யான்மனுடர் சுரர்முனைவர் கட்குநற்
சத்யசா பானுக்ரக
சாமர்த்திய முளதென்று மதுசுத்த வறிவான
தடஞானி கட்கற்பமும்
எவனுமுண் டாவதின் றென்றுமொழி தந்துசில
ரிட்டநடு நனைநன்னறா
ஈந்தலரி யீயவிலை யென்பதை நிகர்க்குமீ
தெக்காலு மொவ்வாதெலாச்
சிவமும் பராக்கிரம செல்வமுந் திருவருட்
சிவஞானி கட்கெநாளுஞ்
சிங்காம லுண்டென்று மிச்செல்வ முன்னருட்
டிறநெறி யொரீஇநிற்கும்
அவஞான வாய்ஞானி கட்கடா தென்றுமுர
சறையலா மெந்தநாளும்
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. 6

**ம**ண்ணின்மிசை யாதொரு நலத்தினைக் கருதியே
மனிதரை வணங்குமனிதன்
மகத்தாய நினைவணங் கொண்ணா தெனச்சொலன்
மலமுணுங் கிருமியமுதம்

6. **நனை** = அரும்பு. **அலரி** = அலர்ந்த பூ. **சிங்கல்** = குறைதல்; "சிறுகலே யீன மூனஞ் சிங்கலே" என்பது **சூ** – **நிகண்டு.**

உண்ணொணா தென்பதைப் பொருவுமுன் னடியர்தம்
முள்ளுக்கு ளனவரதநீ
உண்மையா லவர்வடிவ மெல்லாமு னிலயமென்
றுள்ளாது மனிதவடிவென்
றெண்ணியிகழ் பதகன்மதி வச்ரமுங் கஞ்சனமு
மேகமென் றெண்ணுமூட
ஈனமதி யேயா மெலாவும்பர் முனிவர்களு
மேத்திவந் திக்குமிறையார்
அண்ணலே நின்னடிய ருக்கடிமை யாதலே
யாசற்ற பூதிபூதி
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. 7

**ச**டமாக வுளதத்வ ரூபமத னுடையதரி
சனம்வால் பெறுஞ்சுத்தியுஞ்
சைதன்னிய முடையான்ம ரூபமத னுடையதரி
சனமுமுயர் வுறுசுத்தியுந்
திடமான சிவரூப முந்தெருள் சிறந்தசிவ
தெரிசனமு மலைவிகந்த
சிவயோக முந்திவ்விய சிவபோக முங்கண்டு
சின்மய விலாசமாகச்
சுடருமொரு பெரியபே றுன்னன்ப ருக்குளது
சொலின்மற்றை யர்க்கொவ்வுமோ
துரியவெளி மயசிதா காசசுக தெய்வமே
சுகவருட் கருவூலமே
அடமான வாணவ வராவைவிறல் கெடவே
யகைக்கவரு பேரொகரமே
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. 8

7. **வச்ரம்** = வஜ்ரமென்னும் வைரம். **கஞ்சனம்** = கண்ணாடி.


8. “சொலின்மற்றையர்க் கொவ்வுமோ” என்பது மற்றையர்க்குச் சொலின் ஒவ்வுமோ என வியையும். சொல்லின் – சொலின் – எனத் தொகுத்தல் விகாரம். **கருவூலம்**= பொக்கிசம். கருகூலமென்றுங் கூறுப. **அகைத்தல்** = அடித்தல்; “உம்ப லகைத்த லொண்முறி யாவும்” என்றார் (மலைபடு கடாத்திற்) **பெருங்கௌசிகனாரும். ஒகரம்** = மயில்; **பி – நிகண்டு.**

இருபத்து நான்காய வான்மதத் துவமா
யிராநின்ற வசுசிமாயை
என்னுமொரு பாழுமே ழாயவித் யாதத்வ
மெனவுள்ள வசுசிசுசியும்
மருவுற்ற மாயையெனு மொருபாழு மைந்தாகு
மாண்புந்து சிவதத்வமாய்
வழுத்துற்ற சுசிமாயை யென்னுமொரு பாழுமுறை
வரிசையா யகியிரசிதம்
முருகுற்ற பொன்போல வுளவேனு மங்ஙனே
மூன்றுமண் ணென்றுணர்தல்போன்
முப்பாழு மறிவற்ற சடமெனக் கண்டுதளி
மூன்றற்கு மப்பாலிலே
அருவப் பெரும்பரம வானென் றளாவுபவ
ரலரோவு னாக்கமுள்ளார்
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. 9

மெய்யுடைமை யீதல்பகை யின்மையின் சொல்பொறுமை
மெய்யுடைய வெவ்வுயிரினும்
விலகாத காருணிய மனமொரு வழிப்படல்
விகாரமின் றுள்ளுக்குளே
தொய்யலா நிற்குமுட் கரணசங் கோசமதி
சுத்தவறி வென்றுசொல்லுந்
துணியின்மா னததீர்த்த மாடிநடு நின்றுள்ள
சுப்பிரதக ராலயத்துட்
பையுளில் லாதுனைக் கண்டுகளி கூருமோர்
பாக்கிய முளார்தம்மருட்
பார்வைக் கிலக்காகு நாளரோ நலநாள்
பரிந்துதயை குயிறல்வேண்டும்

9. **பாழ்** = அபாவம், இல்பொருள். **சருவேசுரபதி** என்னும் 37 - ஆம் பத்தின் 6, 7-ஆந் திருப்பாட்டுக்களில் விவரமறிக. **அகி** = இரும்பு; **ககரவெதுகை** காண்க. **இரசிதம்** = வெள்ளி.

10. **தொய்யல்** = இன்பம்; **பி - நிகண்டு, தகரவெதுகை.**

சுப்ரம் () என்னும் வடசொல் விளக்கமுடைமை குறிக்கும்.

ஐயனே யருணகிரி மெய்யனே யெனையாளு
மப்பனே யொப்பிலானே
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே.